**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ம் நாள் வெள்ளிக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.3 தருமன், வயது 53, த/பெ கண்ணன்

**குறுக்கு விசாரணை**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை கோயிலின் பொருளாளர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணமான டிரஸ்டிலும் நான் பொருளாளர் என்று குறிப்பிட்டு கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நாங்கள் கோயில் கட்ட 2009ம் ஆண்டில்தான் முயற்சித்தோம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2003ம் ஆண்டு கட்ட ஆரம்பித்து 2009ல் கும்பாபிஷேகம் நடத்தினோம் என்றால் சரிதான்.

2. 2003ம் ஆண்டு கோயில் கட்ட துவங்கிய போதே டிரஸ்ட் ஆரம்பிக்க வேண்டும் என்பதற்கான ஆவணம் ஏதேனும் எங்களிடம் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கின் வாதிதான் 2009ம் ஆண்டு டிரெஸ்டியின் நிர்வாகியாக இருந்து கும்பாபிஷேகத்தை முன் நின்று நடத்தினார் என்றால் சரியல்ல, பொதுமக்கள் சேர்ந்துதான் நடந்தது. கோயிலுக்கான மின் இணைப்பை வாதி நிர்வாகம் செய்த போது பழனி பெயரில் அவரால் பெறப்பட்டது என்றால் சரியல்ல, கோயில் பொதுவாக உள்ள போது மின் இணைப்பும் பொதுவானதுதான்.

3. இதே நீதிமன்றத்தில் பழனி பெயரில்தான் மின் இணைப்பு உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும், தற்போது நான் பொதுவாகதான் மின் இணைப்பு உள்ளது என்று சாட்சியம் அளிப்பதால் எது உண்மை என்றால் பொதுவாக உள்ளதுதான் உண்மை. வா.சா.ஆ.1 வாதிதான் முதல் முதலில் முன் எடுத்து டிரஸ்டை நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி டிரஸ்ட் 51/2015 என பதிவாகி உள்ளது என்றால் சரிதான். வாதி டிரஸ்டை நிர்வாகம் செய்வதற்கு முன்பு பொது அறிவிப்பு கொடுத்துதான் பதிவு செய்தார் என்றால் இல்லை.

4. வாதி பெயரில் டிரஸ்ட் பதிவாகி உள்ள விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் பதிவு செய்த பின்னர் அவர் செய்திதாளில் விளம்பரம் செய்த போதுதான் எனக்கு தெரிய வந்தது. மேற்படி விளம்பரத்தை நான் பார்த்தேனா என்றால் பாரத்தேன். விளம்பரத்தை பார்த்த பின்னர் நான் அதற்கு ஆட்சேபணை ஏதும் தெரிவித்தேனா என்றால் ஆட்சேபணை செய்தோம். மேற்படி ஆட்சேபணையை நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என்ன ஆட்சேபணை செய்துள்ளோம் என்றால் பொதுவாக உள்ள நிர்வனத்தை யாரும் தனி உரிமை கோர முடியாது என்று ஆட்சேபணை செய்தோம்.

5. மேற்படி ஆட்சேபணை சார் பதிவாளர் அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. நாங்கள் எந்த ஆட்சேபணையும் செய்யாமல் ஒரு வருடம் கழித்து எங்கள் பெயரில் டிரெஸ்ட் பதிவு செய்தோம் என்றால் சரிதான். ஒரு கோயிலில் 2 டிரெஸ்டுகள் இருக்க முடியாது என்றாலும், வாதிக்கு எதிராக நாங்கள் வேண்டுமென்றே டிரஸ்டை ஆரம்பித்தோம் என்றால் சரியல்ல. ஆகையால்தான் பி.வா.சா.ஆ.1 ஐ கோயில் பெயரில் பதிவு செய்து விட்டு அதன் பின்னர் பி.வா.சா.ஆ.2 திருத்தல் பத்திரத்தில; Sami என்பதை swami என்று திருத்தம் செய்தோம் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.17 மற்றும் பி.வா.சா.ஆ.18ஐ எதற்காக தாக்கல் செய்தோம் என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து விட்டு 2009ல் தனி உரிமை வாதி கோரிய போது பிரச்சினை ஆரம்பித்து அதன் பின் பொதுவாக கோயில் நடத்த வேண்டும் என்பதற்காக மீட்டிங் போடப்பட்டது, அதுதான் பி.வா.சா.ஆ.17. பி.வா.சா.ஆ.17ல் அப்பா பெயர் மற்றும் விலாசம் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.17ல் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்,

7. பி.வா.சா.ஆ.17ல் விழா குழு தலைமைக்கு கோரிக்கை என்றுள்ளது என்பதற்கு விழா குழு தலைமை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு இல்லை, உறுப்பினர்கள் சேர்ந்து நிர்வாகத்திற்கு கொடுக்கப்பட்டது என்று கூறினார். டிரஸ்ட் ஏற்படுத்திய பின்னர்தான் மேற்படி விழா குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றாலும்,

பி.வா.சா.ஆ.1 ற்கு முன்னர் விழா குழு ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல, 2009ம் ஆண்டிலிருந்து அவ்வாறு செய்து வருகிறோம்.

8. தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியவர்களை எதன் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டனர் என்பதற்கு ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை, ஆனால் என்னிடம் உள்ளது. பி.வா.சா.ஆ.17 இவ்வழக்கிற்காக நாங்களாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.18 எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் 4.09.2015 அன்று திருவிழா நடத்த சொல்லி உறுப்பினர்கள் சேர்ந்து கையொப்பமிட்ட ஆவணமாகும்.

9. 4.09.2015 தேதியில் தலைவர், செயலாளர், பொருளாளர் பொறுப்பை நாங்களே தேர்ந்தெடுத்து கொண்டோம் என்றால் சரியல்ல. 20.11.2015 அன்றுதான் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டது, அதன் பின்னிட்டுதான் தலைவர், செயலாளர், பொருளாளர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றாலும், அதற்கு முன்னரே தலைவர், செயலாளர், பொருளாளர் பொறுப்பை ஏற்றது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.1ஐ ஏற்படுத்தி வாதி கோயிலை நிர்வாகம் செய்து வந்த நிலையில் நாங்கள் பி.வா.சா.ஆ.1ஐ ஆவணத்தை பதிவு செய்து நாங்கள் கோயில் நிர்வாகம் நடத்தினோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் கண்டபடி மாதந்தோறும் ஏதாவது மீட்டிங் நடத்தியதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எங்கள் டிரஸ்டில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் 90 நபர்கள் உள்ளார்கள். தற்போது எத்தனை பேர் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 90 பேர் உள்ளார்கள்.

11. மேற்படி 90 பேரில் எத்தனை பேர் மாறினார்கள், புதியதாக எத்தனை பேரை சேர்த்தோம் என்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1ப்படி நான்தான் பொருளாளர் என்றால் சரிதான். வரவு செலவு எல்லாம் ஆடிட்டரிடம் நாங்கள்தான் ஒப்படைப்போம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 மற்றும் பி.வா.சா.ஆ.14ல் உள்ள சீட்டு என்ன என்றால் 20பேர் சேர்ந்து பொதுவாக சீட்டு நடத்தி அதில் வரும் லாபத்தை கோயிலுக்கு கொடுப்பார்கள்.

12. கோயிலில் வைத்து சீட்டு நடத்தினோமா என்றால் இல்லை, வெளியில் நடத்துவதில்தான் லாபத்தை கோயிலுக்கு நன்கொடையாக கொடுப்பார்கள். ஏன் சீட்டு பணத்தை கோயிலுக்கு நன்கொடையாக கொடுக்கிறார்கள் என்றால் உண்மை. நாங்கள் நடத்தி வந்த சீட்டிற்கு முறையாக அரசு அனுமதி பெறவில்லை என்றால் நாங்கள் சீட்டு நடத்தவில்லை. சீட்டு கட்டிய பணத்தில் நன்கொடையாக யார் கொடுப்பார்கள் என்றால் 20 பேர் கொண்ட குழு கொடுப்பார்கள், அதற்கான ரசீது என்னிடம் உள்ளது.

13. கோயில் பெயரில் சீட்டு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. அதற்கு ஏன் சீட்டு பணத்தை நன்கொடையாக பெறுகிறோம் என்றால் நன்கொடை என்பது அவர்கள் விருப்பப்பட்டு கொடுக்கும் பணமாகும். எங்கள் ஆடிட்டர் வழங்கிய அறிக்கையான பி.வா.சா.ஆ.13ல் பக்கம் 3ல் சீட்டு பணம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உண்மைதான், ஆனால் அது கோயில் பணம் கிடையாது, 20 பேர் கொண்ட குழுவின் நன்கொடையாகும், மேற்படி பி.வா.சா.ஆ.13ல் 20 பேர் கொண்ட குழு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

14. சீட்டு நடத்துவது சட்ட விரோதம் என்றாலும், மேற்படி பணத்தை கோயிலுக்கு நன்கொடையாக பெறுவதும் சட்ட விரோதமானது என்றால் சீட்டை முறையாக அனுமதி பெற்றுதான் நடத்தி வருகிறார்கள், அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. எங்கே பதிவு செய்தோம் என்றால் வெங்கடாசலபதி பைனான்ஸ் என்ற பெயரில் உள்ளது. மேற்படி வெங்கடாசலபதி பைனான்ஸ்க்கும் கோயிலுக்கும் என்ன சம்மந்தம் என்றால் அவர் உபயதாரர். அந்த பைனான்சின் மேலாளர் பெயர் சந்தோஷ் ஆகும். கோயில் பெயரில் சீட்டு நடத்துவதற்கு ஏதேனும் பதிவு உள்ளதா என்றால் கோயில் பெயரில் சீட்டு நடத்தவில்லை.

15. பி.வா.சா.ஆ.13 மற்றும் 14ல் ஆடிட்டர் சீட்டு என்று ஏன் குறிப்பிட்டுள்ளார், சந்தோஷ் கொடுத்த நன்கொடை என குறிப்பிடவில்லை என்றால் 20 பேர் கொண்ட குழு ஆகையால் 20 பெயர்களும் போட முடியாது என்பதால் பொதுவாக சீட்டு என்று குறிப்பிட்டுள்ளார். பி.வா.சா.ஆ.13ல் ஆடிட்டர் அறிக்கையில் போலிஸ் ஸ்டேசன் செலவுகள்

என்று ஏன் குறிப்பிட்டுள்ளார் என்றால் வாதி பிரச்சினை செய்யும் போது அவர் மீது புகார் கொடுக்க உறுப்பினர்கள் காவல் நிலையத்திற்கு வந்து போகும் போது அவர்களுக்கு டீ செலவு செய்வதைதான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். போலிஸ் ஸ்டேசன் செலவு என்று ரூ.2230/- எழுதப்பட்டுள்ளது என்றால் அது டிபன் செலவாகும்.

16. அதுப்போல் பி.வா.சா.ஆ.15 ஆடிட்டர் அறிக்கையில் டீ மற்றும் டிபன் செலவு என்று குறிப்பிடாமல் காவல் நிலைய செலவு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அது டீ செலவுதான். பி.வா.சா.ஆ.15 பக்கம் 3ல் பொது செலவு என்பதில் டீ செலவு என 31.03.2016 அன்று ரூ.90/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தேதிவாரியாக பிரித்து காட்டியுள்ளார். டீ, காபி செலவு ரூ.90/- மட்டும்தான், ஆனால் எங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி காவல் நிலையத்திற்கு கொடுத்த தொகைதான் ரூ.2230/- என்றால் சரியல்ல, நாங்கள் காவல் நிலையத்திற்கு அதுப்போல் எந்த தொகையும் கொடுக்கவில்லை, கோயில் என்பதால் அவர்களும் வாங்கவில்லை.

17. மேற்படி தொகையை டீ, டிபன் செலவு என்று குறிப்பிடாமல் காவல் நிலைய செலவு என்று ஏன் குறிப்பிட்டுள்ளது என்றால் காவல் நிலையத்திற்கு அதுப்போல் எந்த தொகையும் கொடுக்கவில்லை, கோயில் என்பதால் அவர்களும் வாங்கவில்லை. 25.01.2016 அன்று கோட்டாட்சியர் செலவு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.13, 14, 15 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

18. வாதி கோயிலில் சீட்டு நடத்தக் கூடாது என்று ஆட்சேபணை செய்ததால் அதற்கு எதிராக 2015ம் ஆண்டு டிரஸ்ட்டை பதிவு செய்து எங்களுக்கு ஆதரவாக காவல் நிலையம் மற்றும் கோட்டாட்சியர் அவர்களையும் வைத்து டிரஸ்ட் நடத்தி வருகிறோம் என்றால் வாதி டிரஸ்ட்டை தனி உரிமை கோரியதால்தான் நாங்கள் 2015ம் ஆண்டு டிரஸ்டை ஆரம்பித்தோம்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni